


பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் ஜெர்மனி நாட்டுக்கு கல்விச் சுற்றுலா சென்றுள்ள அரசுப் பள்ளி மாணவர்கள் அங்குள்ள உலகப் புகழ்பெற்ற BMW தொழில் நுட்ப அருங்காட்சியத்தினை பார்வையிட்டு ஆரம்பகாலம் முதல் இன்று வரையிலும் வாகன வடிவமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் தொழில்நுட்ப வளர்ச்சியினையும் தெரிந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஒன்றியம், செம்மிபாளையம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.2.09 இலட்சம் மதிப்பீட்டில் ஆதிதிராவிடர் குடியிருப்பு 2வது வீதியில் கான்கிரீட் சாலை அமைக்கும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செயல் துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி, கழக விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் சா.ராஜசேகர், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கீர்த்தி சுப்பிரமணியம், நகர செயலாளர் ந.ராஜேந்திரகுமார், பொங்கலூர் ஒன்றிய செயலாளர் எஸ்.பாலுச்சாமி, மாவட்ட இளைஞர் அணி துணை செயலாளர் ஈ.பாலசுப்பிரமணியம், செம்மிபாளையம் ஊராட்சி முன்னாள் தலைவர் கே.என்.திருமூர்த்தி, மாவட்ட பொறியாளர் அணி முன்னாள் அமைப்பாளர் சிற்பி செல்வராஜ், மாவட்ட மகளிர் அணி முன்னாள் அமைப்பாளர் சரஸ்வதி, ஒன்றிய துணை செயலாளர் சிவக்குமார் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### சட்ட நடைமுறையோ விசாரணை நடைமுறையோ தெரியாமல்

# அரைவேக்காட்டுத்தனமாக அறிக்கை விடுக்கும் எடப்பாடி பழனிசாமி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

**சென்னை, மே 30 -**

**சட்டரீதியான நடைமுறையோ விசாரணை நடைமுறையோ தெரியாத எடப்பாடி பழனிசாமி தாம் ஒரு அரைவேக்காடு என்பதை அவரே அம்பலப்படுத்திக்கொள்கிறார் என்று அமைச்சர் ரகுபதி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

சட்டரீதியான நடைமுறையோ விசாரணை நடைமுறையோ தெரியாத எடப்பாடி பழனிசாமி தாம் ஒரு அரைவேக்காடு என்பதை அவரே அம்பலப்படுத்திக் கொள்கிறார்.

உயர்நீதிமன்றம் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணைக்கு உத்தரவிட்டது உண்மை தான். அந்த SIT தமிழ்நாடு காவல்துறைகோ திமுக அரசுக்கோ தொடர்பு இல்லாததா? அந்த SIT வேறு மாநில அதிகாரிகளோ ஒன்றிய அரசின் அதிகாரிகளோ இல்லை. அவர்கள் தமிழ்நாடு அரசின் காவல்துறை தானே? அண்ணா பல்கலை. மாணவி வழக்கில் SIT குழு சிறப்பாக செயல்பட்டது என்றால் திமுக ஆட்சியில் காவல்துறை சிறப்பாக செயல்பட்டது என்று தான் பொருள்.

அண்ணா பல்கலை. மாணவி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஞானசேகரனை உடனடியாக கைது செய்து, நீதிமன்றக் காவலில் வைத்தது திமுக அரசின் காவல்துறை.

அவர் ஜாமின் பெறாத வகையில் நீதிமன்றத்தில் வாதாடியது திமுக அரசின் வழக்கறிஞர்கள்.

வழக்கை உடனடியாக விசாரிக்க நீதிமன்றம் நியமித்த SIT குழு பெண் அதிகாரிகள் மூவரும் அவர்களுக்கு துணையாக இருந்த விசாரணை குழுவும் திமுக அரசின் காவல்துறையின் கீழ் பணியாற்றும் அதிகாரிகள்.

இப்படி, திமுக அரசின் கீழ் செயல்படும் காவல்துறையால் தான் ஐந்தே மாதத்தில் விசாரணை முடிக்கப்பட்டு நீதிமன்றம் ஞானசேகரனை குற்றவாளி என தீர்ப்பளித்துள்ளது என்று சொன்னால் எடப்பாடி பழனிசாமி ஏன் எரிகிறது? உடல் முழுவதும் இவ்வளவு எரிவது நல்லதல்ல, மருத்துவரை அணுகுவது எடப்பாடி பழனிசாமிக்கு நல்லது.

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் அதிமுகவினர், விசாரணை நடத்தி முக்கிய குற்றவாளிகளை கைது செய்தது சிபிஐ. தீர்ப்பு வழங்கியது சிபிஐ நீதிமன்றம். சாட்சிகள் பிறழ்சாட்சியமாக மாறாமல் காத்தது திமுக அரசின் காவல் துறை என்ற போதிலும் பொள்ளாச்சி பாலியல் வழக்கில் குற்றவாளிகளுக்கு தாம் தான் காரணம் வாய்க்கூசாமல் எடப்பாடி பழனிசாமி கூறியதை பார்த்து சந்தி சிரித்தது என்பது தானே உண்மை.

அண்ணா பல்கலை. வழக்கில் நீதிமன்றத்தின் மேற்பார்வையில் விசாரணை நடந்தது என்பதற்காக நீதிமன்றம் தான் பாராட்டுக்குரியது எடப்பாடி பழனிசாமி சொல்வதும், விசாரித்து ஆதாரங்களை சமர்பித்த காவல் துறையினருக்கும், குற்றத்தை நிரூபிக்க வாதாடிய வழக்கறிஞர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை பாராட்டுக்குரியவர்கள் இல்லை என சொல்வதும் அவரின் அறியாமையை காட்டுகிறது.



“அரசியல் குறுக்கீடு இன்றி நடக்க வேண்டிய SIT விசாரணையை நீங்கள் Influence செய்தீர்கள் என்று வாக்குமூலம் அளிக்கிறீர்களா?” என்று முதலமைச்சரைப் பார்த்து கேள்வி எழுப்பும் எடப்பாடி பழனிசாமி, அதற்கான ஆதாரத்தை SIT நியமித்த நீதிமன்றத்திடம் ஒரிரு நாட்களுக்குள் கொடுத்துவிட்டு, சொல்லும் செயலும் ஒன்றே மானமுள்ளவர் பழனிசாமி என்று நிரூபிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒரு மானங்கெட்ட பிறவி பழனிசாமி என ஊடகங்கள் முன்பு ஒப்புக்கொள்ள வேண்டும். அதை செய்வீரா?...

அதிமுக ஆட்சி அமைந்தால் “அந்த சார்கள்?” யார் என்பதை கண்டுபிடிப் போம் என எந்த அடிப்படை அறிவோ வெட்கவோ இல்லாமல் சொல்கிறார் எடப்பாடி பழனிசாமி.

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை, சாத்தான்குளம் தந்தை மகன் கொலை, கொடநாடு கொலை, கொள்ளை போன்ற அதிமுக ஆட்சியில் நடந்த குற்றங்களின் விசாரணையை எடப்பாடி பழனிசாமி ஆட்சி எப்படி கையாண்டது என்பது உலகத்திற்கே தெரியும்.

அண்ணா பல்கலை. வழக்கை விசாரித்த SIT குழு நீதிமன்றத்தின் முழு மேற்பார்வையில் செயல்பட்டது, அதுகூட திமுக அரசின் காவல்துறைக்கு உட்பட்டது என்றாலும் விசாரணை நீதிமன்றமும் மேற்பார்வை பார்த்த சென்னை உயர்நீதிமன்றமும் திமுக ஆட்சிக்கு உட்பட்டவை இல்லையே?... அந்த சார் யார்? என்பதற்கு ஆதாரம் இருந்தால் நேரடியாக நீதிமன்றத்தில் சமர்பித்து சந்தேகத்தை இப்போதே உறுதி செய்யலாமே?

எந்த ஆதாரமும் கையில் இல்லாமல் கடந்த 5 மாதமாக புலம்பியது போதும் எடப்பாடி பழனிசாமி அவர்களே? குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு தண்டனை வாங்கி தரும் வேலையை திமுக அரசு சிறப்பாக செய்துவிட்டது. நீங்கள் புலம்பாமல் அமைதியாக தூங்குங்கள்...

பொள்ளாச்சி பாலியல் வழக்கில் அதிமுக பிரமுகர்களுக்கு தொடர்பு இருந்ததை திமுக பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக அம்பலப்படுத்தியால், காழ்ப்புணர்ச்சியாக அண்ணா பல்கலை. மாணவி வழக்கில் திமுக பிரமுகர்களுக்கு தொடர்பு இருப்பதாக கூறி “யார் அந்த சார்?” என சமூக வலைதளங்கள் மூலம் அரசியல் செய்த எடப்பாடி பழனிசாமி, அதற்கான ஆதாரங்களை விசாரணை நீதிமன்றத்தில் கொடுத்து நிரூபித்தி ருக்க வேண்டாமா? ஏன் ஆதாரங்களை இது வரை தரவில்லை? அவதூறுக்கு ஆதாரம் இருந்தால் தானே தர முடியும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா ஜூன்3 அன்று

# இராணிப்பேட்டை மாவட்டத்தில் ஊர் கிளை, உட்கிளை தோறும் சிறப்பாக கொண்டாடிடுவோம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி வேண்டுகோள்

இராணிப்பேட்டை, மே 30-

இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் ஆர். காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தங்கச் சூரியன் உதிக்கும் வங்க கடலோரத்தில் துயில் கொண்டிருக்கும் எங்கள் அன்பு கலைஞரே,

“என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே” எனும் காந்தக் குரலுக்கு சொந்தமான எங்கள் முத்தமிழ் அறிஞரே,

பெரியாரின் எண்ணங்களை அண்ணாவின் வழியில் நடைமுறை படுத்தி பல லட்சியங்களை சாதித்த பேரறிஞரின் தம்பியே,

சட்டங்கள் பல இயற்றி, திட்டங்கள் பல தீட்டி தமிழ்நாட்டை உலகறிய செய்த எங்கள் அன்பு இதயமே,

அய்யன் வள்ளுவருக்கு தேர் வைத்தால் போதாது என்று வானுயர சிலை வைத்து உலகத்தையே அண்ணார்ந்து பார்க்க வைத்த திருக்குறளுக்கு உரை எழுதிய தங்க பேனாவே,

உங்கள் பிறந்த நாளில் நின்னை வணங்குகின்றோம்.

இந்திய நாட்டிலேயே சிறந்த முதலமைச்சராக நான்காண்டுகள் சிறப்பான சாதனைகளை புரிந்து ஐந்தாவது ஆண்டில் வெற்றி நடை போட்டு கொண்டிருக்கும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் கரங்களை வலுப்படுத்துவோம்.

கழக அரசின் சாதனை திட்டங்களை தமிழக மக்களிடத்தில் சென்றடையும் வகையில் பிரச்சாரம் செய்து “வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு” தமிழக முதல்வர் திராவிட மாடல் நாயகர் தளபதி அவர்களின் சபதத்தை நிறைவேற்றும் வகையில் கழக தோழர்கள் இரவு பகல் பாராது அயராது உழைத்து 2026 - ல் கழக ஆட்சி அமைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளில் சபதம் ஏற்போம்.

எனவே மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட கழகத்தின் அனைத்து அணியினர், உள்



ளாட்சி பிரதிநிதிகள் அவரவர் பகுதியில் பங்கேற்று இருவண்ணக் கழக கொடி உயர்த்தி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இனிப்பு, நலத்திட்டங்கள் வழங்கி மற்றும் மாணவ, மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகம், எழுது பொருட்கள் வழங்கி கண் தானம், இரத்த தானம், அன்னதானம் ஆகிய நிகழ்ச்சிகளை சம்பந்தப்பட்ட நகர, ஒன்றிய,

பேரூர் செயலாளர்கள், வட்ட கிளை, உட்கிளை, ஊர் கிளை செயலாளர்கள் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆலோசனைப்படி அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் கழக அரசின் நான்காண்டு சாதனைகள் விளக்கப் புத்தகத்தை தெற்கு ஒன்றிய செயலாளர் ஏ.விஜயகுமார் பொதுமக்களிடம் வழங்கி கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் பேரூர் செயலாளர் பாபு , மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் முனைவர் வரத. ராஜசேகரன்,மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மண்டலப் பொறுப்பாளர் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் பங்கேற்பு!

# விழுப்புரம் மத்திய மாவட்ட கழக கலந்தாய்வுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., அறிக்கை!

விழுப்புரம், மே 30 -

விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. மண்டல பொறுப்பாளர் கலந்தாய்வுக் கூட்டம் இன்று (30.05.2025 - வெள்ளிக்கிழமை) பிற்பகல் 2.00 மணிக்கு, வானூர் சட்ட மன்ற தொகுதிக்கும், 3.00 மணிக்கு விழுப்புரம் சட்ட மன்ற தொகுதிக்கும் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள தளபதி அரங்கில் நடைபெற்ற உள்ளது.

எனது தலைமையில் நடை



பெற உள்ள இக்கூட்டத்தில் மண்டலப் பொறுப்பாளர், அமைச்சர் எம்.ஆர்.பன்னீர் செல்வம் கலந்து கொண்டு நிர்வாகிகளுடன் கலந்துரையாடுகிறார். விழுப்புரம் சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர் துரை கி.சரவணன், மாநில ப பொறியாளர் அணி பசயலாளர், வானூர் சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர் எஸ்.கே.பி.கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்து கலந்து கொள்கிறார்கள். இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன், எம்.எல்.ஏ., தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இதில் மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் உள்பட மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், சட்டமன்ற பார்வையாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**21-ம் ஆண்டு நினைவு அஞ்சலி**



திருமதி. **கமலா அரங்கநாதன்**
நினைவு தினம் 16–05–2004


திரு. **மு. அரங்கநாதன்** Ex. M.L.A.
நினைவு தினம் 30–05–2004

என்றும் உங்கள் ஆசீர்வாதத்துடன்

**The Graphic Design Shop & Cuckoo Garden** Mahabalipuram
அலுவலக ஊழியர்கள்,
சென்னை – 14 Mob: +91 94440 74706

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வடகாடு த. நல்லதம்பி
### மே 30 (2014)



தமது இளம் வயதிலேயே திராவிட இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு,நாடக மன்றம் ஒன்றினை தானே துவக்கி, அதில் தானும் நடித்து அப்பகுதி முழுவதும் திராவிடக் கொள்கைகளை பரப்பினார். கழகம் துவங்கிய பின்னர் அதில் இணைந்து பணியாற்றினார்.

அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணி இயக்கத்தில் ஆலங்குடி பகுதி தலைவர் – திருவரங்குளம் ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட விவசாய அணிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை நிலவள வங்கி தலைவராகவும், இயக்குநராகவும் – மாவட்ட அரசு மருத்துவமனை ஆலோசனை உறுப்பினராக பதவி வகித்தவர்.

1962 விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் – 1964 இந்தி எதிர்ப்பு சட்ட எரிப்பு போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் – 1986 சட்டநகல் எரிப்பு போராட்டம் ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறைத் தண்டனை பெற்றதோடு நெருக்கடி நிலை மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**